**பஸ்கொட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 19 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து பஸ்கொட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா 136,758 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) எஹலகந்த இஹலகொட பாதையை செப்பம் செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 500,000 இற்கான தொகை தொடர்ந்தும் நிலுவை மூலதன உதவி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 83,000 பெறுமதியான கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) 02 நிர்மாண வேலைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 1,992,750 இற்கான முற்பணத் தொகையில் அந் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும், அதனை ஆண்டிற்கான செலவுகளில் உட்படுத்தியிருக்கவில்லை.

(உ) ஊருபொக்க வர்த்தக கடைத்தொகுதி நிர்மாணித்தல் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 8,169,257 இற்கான ஒரே முறையில் செலுத்தும் பணத்தினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 17,107,635 தொகையான நிலுவை ஏனைய வருமான நிலுவையில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 1,760,880 இற்கான 07 மீதிகளும் அடங்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 22,449,864 தொகைக்கான செலவுக் கடன்கொடுத்தோர் மீதியல் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 390,000 இற்கான 03 மீதிகள் அடங்கியிருந்தன.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 821,257 இற்கான 04 செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் காணப்பட்ட போதிலும், அவற்றை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,758,665 இற்கான தொகையினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 26,936,017 தொகைக்கான 03 நிலையான சொத்து மீதிகள் தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட மற்றும் முறைப்படி பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, உருத்துறுதி மற்றும் பொருட்பதிவேடுகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 553,450 தொகைக்கான 29 செலுத்த வேண்டிய வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,188,452 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,268,647 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,919,805 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 72 சதவீதம் அளவான மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து இரண்டு வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுக் அதிகரித்திருந்ததுடன் வருமான உதவி கிடைக்காவிடின் சபையினால் சுயமாக உருவாக்கி மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக எவ்விதத்திலும் இயலாத ஒரு நிலைமையினைக் காட்டியது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்கான நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரம் 1:1.7 என காட்டப்பட்டிருந்த போதிலும் கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்து அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 1,760,880 இற்கான மீதிகள் காணப்பட்டமையால் அந்த விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 ஏக்கர் வரி

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 97,654 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 35,267 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 132,921 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 39,341 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 93,580 தொகைக்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.4.2 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப நிலுவை மீதி ரூபா 2,252,215 தொகையாக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 1,598,500 தொகையுடன் ரூபா 3,850,715 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 651,520 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 3,199,195 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) 2014 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் பின்னர் ஊருபொக்க வர்த்தக கடைத்தொகுதியில் மற்றும் வினல் விளையாட்டுத் திடலுக்கு அண்மையிலுள்ள கடைகளில் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 2,285,470 இனால் அதிகரித்திருந்தது. அவற்றில் 35 கடைகளில் உடன்படிக்கைகள் 2014 திசெம்பர் 31 திகதியில் பின்னர் புதுப்படுத்தாமையால் நிலுவை வாடகை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

### 2.4.3 சந்தை வாடகை

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 136,862 இற்கான நிலுவை மற்றும் ரூபா 5,731,700 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,868,562 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 5,725,030 தொகை காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 143,532 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,027,138 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 11,810,440 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 மூலதன வேலைத் திட்டங்கள் நிறைவேற்றுவதில் முன்னேற்றம்

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு மூலதன செலவுகள் ரூபா 38,490,000 தொகையாகக் காணப்பட்ட போதிலும், உள்ளவாறான மூலதன செலவுகள் ரூபா 26,499,518 தொகையாக காணப்பட்டமையால் மூலதன செலவுகளின் முன்னேற்றம் 69 சதவீதமாகும்.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

சபைக்குச் சொந்தமான 23 காணிகளின் அளவை விடயங்களுக்காக ரூபா 1,201,550 இற்கான செலவு மேற்கொண்டிருந்த போதிலும், அந்தக் காணிகளை பாதுகாப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

#### 3.2.1 மனித வள முகாமைத்துவம்

ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த மூன்றாம் தர, இரண்டாம் மட்டத்தில் 02 பதவிகள் மற்றும் ஆரம்ப தர மட்டத்தில் 02 பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக மற்றும் 04 பதவிகளில் காணப்படும் 07 மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 3.2.2 பதவியணிக் கடன்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,819,345 தொகையாகும்.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊருபொக்க பஸ் நிலையத்தில் 40 கடைகள் முன் விற்பனை அடிப்படையில் பங்கீடு செய்வதற்காக 2012 ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் அவற்றில் 11 பேர்கள் மாத்திரம் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தனர். உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்படாமையால் உடன்படிக்கை இரத்தாகியிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ஒரே முறையில் செலுத்தும் பணத்தில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 8,169,257 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 27,429,070 தொகையொன்று செலவிடப்பட்டு 15 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 11 கடைகள் 2016 மார்ச் 11 திகதி வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

### 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 7,750,000 தொகை கிரயத்தையுடைய பெக்கோ லோடர் ஒன்று 2015 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், ரூபா 18,765,944 தொகை கிரயத்திற்கான வேறு 05 சொத்துக்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 3.5 செயற்திட்டங்கள் தாமதமாதல்

தலைமை அலுவலகத்தில் புத்தர் மாளிகை நிர்மாணிப்பதற்காக ரூபா 200,000 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது குறிப்பிட்ட நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது குப்பைகளை சேகரிப்பதற்கான சம்பளங்கள் மற்றும் படியாக, எரிபொருள் மற்றும் வாகனங்கள் பழுதுபார்த்தல் செலவாக ரூபா 3,376,686 இற்கான செலவு செய்யப்பட்டு 157,138 கி.கிராம் குப்பைகள் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 818,999 தொகை செலவிடப்பட்டு சேதனப் பசளை 17,779 கி.கிராம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்படாத குப்பைகள் சபைக்கு உரித்தாக்கப்படாத பொரலம்பொத காணிக்கு அகற்றப்படுவதுடன் அந்தக் காணிக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

### 3.7 சுற்றாடல் சார் பாதிப்புக்கள்

2008 ஜனவரி 25 ஆம் திகதிய 1533/16 இலக்க வர்த்தமானியின் மூலம் 25 கைத்தொழில்களுக்காக பிரதேச சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. வர்த்தக வரி செலுத்தும் கைத்தொழில்களைச் சேர்ந்த 94 வர்த்தகங்களில் 77 இற்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையின் காரணத்தினால் சபைக்கு ரூபா 338,800 வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 9,277,101 தொகைக்கான சேமிப்புக்களும் 03 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 9,260,351 தொகை வரை காணப்படல் இதற்கு காரணமாகியுள்ளது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 442,448 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்**

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்